கோடி ரூபாயிலே இப்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டுகின்ற பணிகளும் நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல ஒவ்வோர் ஆண்டும் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வழங்குகின்ற சிறப்பான கொள்கை முடிவினை; திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றுகின்ற பணியை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். விருதுநகர் மாவட்டத்தை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இந்தக் கோரிக்கையை, சந்தக பூமியில் வெந்திருக்கும் மக்களுக்காக இதயம் கனிந்து, விருதுநகரில் உறுதியாக மருத்துவக் கல்லூரி அமைய, கூடியவிரைவில் பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour-ல் ஒன்றும் raise செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். திரும்பத் திரும்ப எழுந்து கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? சொல்லுங்கள். என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே அதுவெல்லாம் முடிவாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அவையினுடைய தீர்மானம். அதைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு ஒன்றுமில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, அவையெல்லாம் ஒன்றுமில்லை. ஏற்கெனவே முடிவாகிவிட்டது. அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே அவையிலே அதைப் பற்றியெல்லாம் பேசி முடித்துவிட்டோம். அதைப் பற்றியெல்லாம் raise பண்ண முடியாது. உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

அதுசம்பந்தமாக நீங்கள் பேச முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரை அனுமதித்திருக்கிறேன். அதன்பிறகும் நீங்கள் எல்லாம் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? இது முறையல்ல. உங்கள் தலைவரை அனுமதித்திருக்கிறேன். இருந்தும் நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) அனுமதிக்காமல் இருந்தால்கூட பரவாயில்லை.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் (திரு. எஸ். ஜான் ஜேக்கப் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.)

டாக்டர் கிருஷ்ணசாமி, என்ன விஷயம் சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், திரு. க. பாலகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, அவையெல்லாம் அவைக் குறிப்பில் வராது.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகா. . (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, அவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், பேசுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகாவிற்கு உட்பட்ட ஒரு மாற்றுத் திறனாளி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சி உறுப்பினர் இன்றைக்கு பேசப் போகிறார். (குறுக்கீடு) அவரைப் பேசச் சொல்லுங்கள். ஏற்கெனவே நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்திருக்கிறோம், ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது zero hour அனுமதிப்பதில்லை என்று. (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள், பதில் கிடைக்கும். உட்காருங்கள். (குறுக்கீடு)

அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்), 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள். . .

(புதிய தமிழகம் கட்சி, உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைத் தலைவர் முன்பாக நின்று கொண்டு ஏதோ பேச முற்பட்டார். பின்னர் தரையில் அமர்ந்துகொண்டார்.)

இதுமாதிரி செய்வது சரியல்ல. இது முறையல்ல. இதெல்லாம் சரியில்லை. மீண்டும் மீண்டும் இந்த அவை அலுவலுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலே டாக்டர் கிருஷ்ணசாமி நடந்துகொள்வதால் அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். அவைக் காவலர்கள் அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். இது முறையல்ல.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

3. அறிவிப்பு

பேரவை மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்கு பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்கள் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு 2-லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.